


# பல்கலை மருத்துவ மனைகள் டார்செட் NHS பவுண்டேஷன் ட்ரஸ்ட், அவசர மருத்துவப்பிரிவில் இரத்தத்தில் பரவியிருக்கும் வைரஸ் கிருமிகளை தணிக்கை சோதனை செய்தல்

**டிசம்பர் 2024**

மருத்துவ மனைகள் டார்செட் NHS பவுண்டேஷன் அவசர மருத்துவப் பிரிவில் (A&E) ஒரு இரத்தப்பரிசோதனை உங்களுக்கு மேற்கொள்ளப்படுகிறதென்றால் அப்போது உங்களுக்கு ஒரு HIV, ஹெப்பாட்டிடிஸ்B மற்றும் ஹெப்பாட்டிடிஸ் C சோதனைகளும் மேற்கொள்ளப்படும் எங்கள் அவசர மருத்துவப்பிரிவில் . மேற்கொள்ளப்படும்BBVs சோதனைகள் , வெளியேறும் விருப்பத்தின் அடிப்படையில் “( ஆப்ட் அவுட் இருக்கும். அதாவது உங்களுக்கு வழங்கப்படும் சிகிச்சையின் ஒரு பகுதியாக இரத்த மாதிரி உங்களிடமிருந்து எடுக்கப்பட்டால், நாங்கள் தானாகவே BBVS சோதனையை மேற்கொள்வோம் என்று பொருள்படும்

## <u>அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்</u>

### என்ன நடக்கிறது?

நேஷனல் ஹெல்த் சர்வீஸ் இங்கிலாந்து மற்றும் NHS இம்ப்ரூவ்மெண்ட் (NHSEI) இரண்டும் நோய்ப்பரவல் அதிகமுள்ள உள்ளூர் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அவசரமருத்துவப் பிரிவுகளில் புதிய நோயாளிகளை அடையாளம் காணுவதற்கான ஒரு நிரூபிக்கப்பட்ட செயல்திறன் மிக்க வழிமுறையான வெளியேறும் விருப்ப ( ஆப்ட் அவுட்) சோதனைகளை விரிவாக்கம் செய்து வருகின்றன மற்றும் இந்த நடைமுறைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் அடுத்த மூன்று ஆண்டுகளில் £20m தொகையை முதலீடு செய்யும் டார்செட் NHS பவுண்டேஷன் மருத்துவ மனைகளின் அவசர மருத்துவப் பிரிவும் இதில் பங்குபெறும் அத்துடன் இரத்தத்தில் -HIV, ஹெப்பாடிட்டிஸ் B மற்றும் ஹெப்பாட்டிட்டிஸ் C வைரஸ் பரவல் பாதிக்கப்பட்ட

மக்களுக்கு நோய் கண்டறிதல் மற்றும் ஆதரவு வழங்கல் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பாகவும் இதை பயன்படுத்திக் கொள்ளும்

- ஆம் ஆண்டுக்குள் 2020, புதிய HIV நோய்த் தொற்றுக்கள் அறவே இல்லாமல் செய்து ஜீரோ நிலையிலும் பராமரிப்பதற்கு தவிர்க்கக் கூடிய மரணங்களை ஜீரோ நிலையிலும் மற்றும் இது குறித்த அவமான மன நிலையை ஜீரோ நிலையில் பராமரிப்பதற்கும் சோதனைகளை மேற்கொள்வது மிகவும் அவசியம்
- 2020 ஆம் ஆண்டு நோய் இங்கிலாந்தில் நோய் கண்டறிதல் நடைமுறைகளின் போது கண்டறியப்பட்ட HIV ஆல் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட பாதி நோயாளிகள்(42%) தாமதமாக கண்டறியப்பட்டிருப்பதாக சமீபத்திய@UKHSA தரவுகள் தெரிவிக்கின்றன

- HIV பாதிப்பு இருப்பதற்கான எந்த ஒரு அறிகுறியுமில்லாமல் மக்கள் நீண்ட நாட்கள் வாழ முடியும். மற்றும் உங்கள் HIV நிலை பற்றித் தெரிந்து கொள்ள இருக்கக் கூடிய ஒரேவழி அதற்கான சோதனை செய்து கொள்வது மட்டும்தான்
- உங்களுக்கு HIV நோய்த் தொற்று இருந்தால் அதைத் தெரிந்து கொள்வதன் மூலம் உங்களுக்கான சிகிச்சையை தொடங்கி ஆரோக்கியமாக இருக்க முடியும் மற்றும் அந்த வைரஸ் வேறு எந்த ஒருவருக்கும் பரவாமல் தடுக்க முடியும்.

**BBVs என்று நாங்கள் கூறுவதன் பொருள் என்ன ?**

இந்த சூழமைவில் BBVs என்பவை HIV,ஹெப்பாட்டிடிஸ் B மற்றும் ஹெப்பாட்டிட்டிஸ் C என்று கருதப்படுகிறது.

குறிப்பாக எது குறித்து நாம் சோதனை செய்ய வேண்டும் **?**

ஹெப்பாட்டிட்டிஸ் C - HCV ஆண்டிபாடி,

ஹெப்பாட்டிடிஸ் B – HbsAg

HIV (ஹ்யூமன் இம்யூனோ டெஃபிஷிய வைரஸ்) ன்சிhuman– (Ab and Ag P24)

## இதிலிருந்து நான் எவ்வாறு விலக முடியும் ?

ஹெப்பாட்டிடிஸ் B மற்றும் ஹெப்பாட்டிட்டிஸ் C அல்லது HIV நோய்த் தோற்றுக்கான சோதனை செய்து கொள்ள நீங்கள் விரும்பவில்லை என்றாள், தயவுசெய்து உங்கள் இரத்த மாதிரி சேகரிக்கும் அலுவலரிடம் தெரிவியுங்கள்.

## என் இரத்தத்தில் HIV, ஹெப்பாட்டிட்டிஸ் B மற்றும் ஹெப்பாட்டிட்டிஸ் C ஆகியவற்றுக்கான சோதனை ஏன் மேற்கொள்ளப்படுகிர்து?

ஒவ்வொரு வைரஸுக்கும் வெவ்வேறு சிகிச்சை முறைகள் உள்ளன. அனைத்து சிகிச்சை முறைகளும் பாதுகாப்பானவை, செயல்திறன் மிக்கவை மற்றும் எளிதானவை. இந்த சிகிச்சை முறைகள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் மற்றும் இந்த வைரஸ் பிரவுவதை தடுக்கவும் உதவும். ஹெப்பாட்டிஸ் C முழுமையாக குணப்படுத்தக் கூடியது. ஒரு முறையான சிகிச்சை மூலம் நீங்கள் நீண்ட நாள் ஆரோக்கியமாக வாழ முடியும்.

## HIV ஹெப்-B, மற்றும் ஹெப்-C சிகிச்சை அனைவருக்கும் இலவசமாக வழங்க்ப்படுமா?

ஆம், UK இல் சிகிச்சைக்காக அணுகும் அனைவரும் சிகிச்சையை இலவசமாகப் பெறமுடியும்.

## UK இல் நிரந்தர குடியுரிமை பெறாத ஒருவரிடம் அவர், சரியான பராமரிப்பு வழங்கி ஆதரவளிக்கப்படுவார் என்று நான் எவ்வாறு உறுதியளிக்க முடியும் ?

குடியுரிமை நிலை மற்றும் பொது நிதி ஆதாரங்களை அணுக்கமுடியாதவர்கள் என்ற எந்த ஒரு பாகுபாடும் இன்றி, சிகிச்சை இலவசமாக வழங்கப்படும். நாட்டிலிருந்து வெளியேற்றப்படும் நோயாளிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சை 3 மாதங்கள் வரை வழங்கப்பட்டு ஹெப் C க்கான முழு சிகிச்சை கால அளவையும் உறுதி செய்யமுடிவதற்கான வாய்ப்பு எப்போதும் இருக்கிறது. நாட்டில் இருக்கும் காலத்தில் HIV மற்றும் ஹெப் B க்கு வழக்கமான NHS தர சிகிச்சை மற்றும் ஆதரவு வழங்கபடும் மற்றும் சிகிச்சை பெற்றுவரும் தனிநபர்களுக்கு UK ஐ விட்டு வெளியேறிய பிறகு அவர்கள் தாங்களாகவே பொருப்போடு

தங்களை மேலாண்மை செய்து கோவதை உறுதி செய்யும் வகையில் ஆலோசனைகள் வழங்கி ஆதரவளிக்கப்படும்.

**பின் வரும் சந்தர்ப்பங்களில் என் பரிசோதனை முடிவு எனக்கு அறிவிக்கப்படுமா ?**

- **உங்கள் பரிசோதனை முடிவு எதிர்மறையாக இருந்தால். ...**

ஒரு எதிர்மறையான முடிவு நாங்கள் சோதனை செய்த சந்தர்ப்பத்தில் உங்களுக்கு ஹெப்பாட்டிட்டிஸ் B, ஹெப்பாட்டிட்டிஸ் C அல்லது HIV என்பதாக பொருள்படும். அது குறித்து உங்களுக்கு தகவல் வழங்கப்படாது.

- **உங்கள் பரிசோதனை முடிவு ரியாக்டிவ் என்று இருந்தால் ...**

உங்கள் பரிசோதனை முடிவு ரியாக்டிவ் ((தற்காலிகமான நேர்மறை முடிவு) என்று இருந்தால் அடுத்து மேற்கொள்ளவேண்டிய படிநிலைகள் குறித்து கலந்துரையாட ஒரு பொருத்தமான சிறப்பு சேவை வழங்குனருடனான ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்ய உங்களை நாங்கள் நேரடியாக தொடர்பு கொள்வோம் .

தொழில்நுட்பக் காரணங்களால் உங்களுக்கான பரி சோதனையை எங்களால் செயல்படுத்த முடியவில்லை என்றால் குழுவின் ஒரு உறுப்பினர் உங்களை தொடர்பு கொள்வார் மற்றும் மீண்டும் ஒரு பரிசோதனையை மேற்கொள்ளப்படும்.

**மேலும் அதிக தகவல்களை பெற நான் UHD இல் யாரை தொடர்பு கொள்ளவேண்டும் ?**

உங்களுக்கு ஏதாவது கேள்விகள் அல்லது கவலைகள் இருக்குமானால் நீங்கள் 07795 914621என்ற எண்ணில் செவிலியர் குழுவை அழைத்து தொடர்பு கொள்ளலாம் .

தகவலை 24/7 மணிநேரமும் நீங்கள் அனுப்பலாம் ஆனால் அத்தகைய கேள்விகளுக்கு திங்கள் கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை (வங்கி விடுமுறை நாட்கள் தவிர்த்து) , காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மட்டுமே பதில் வழங்கப்படும். அலுவலர்களுக்கு அதிக வேலை இருக்கும் பட்சத்தில், நீங்கள் ஒரு செய்தியை மட்டும் அனுப்பவேண்டியிருக்கும், மற்றும் கூடுமானவரை அவர்கள் உங்களை விரைந்து தொடர்புகொள்வார்கள்.

**என் தகவல் தொடர்பு விவரங்களில் மாற்றங்கள் இருந்தால் என்ன நடக்கும்?**

உங்கள் பரிசோதனை தொடர்பாக உங்களைத் தொடர்பு கொள்ள, எங்களிடம் சரியான தகவல் தொடர்பு விவரங்கள் (குறைந்த பட்சம் ஒரு தொலைபேசி எண்) இருப்பதை தயவு செய்து உறுதி செய்யுங்கள். பரிசோதனைக்குப் பிறகு ஒருவாரத்துக்குள் உங்கள் தொடர்புத் தகவல்களில் ஏதாவது மாற்றம் இருந்தால் தயவு செய்து அது குறித்து எங்களுக்கு அறிவியுங்கள். உங்கள் தகவல் தொடர்பு விவரங்கள் சரியாக இருக்கிறதா என்பதை, எங்கள் வரவேற்பு பணியாளர் அல்லது உங்களுக்கு சிகிச்சை அளித்துவரும் மருத்துவர் அல்லது செவிலியர் ஆகியோரிடம் சரிபார்த்து உறுதி செய்து கொள்ளலாம் .

## இந்த வைரஸ் தொற்று குறித்து நான் தெரிந்து கொள்ள விரும்பவில்லை என்றால் என்னவாகும் ?

தங்களுக்கிருக்கும் நோய் நிலை குறித்து அறியாமல் இருக்கும் அனைவரையும் இந்த சோதனையை மேற்கொள்ள நாங்கள் ஊக்குவித்து வருகிறோம். அது குறித்து அறிந்து கொள்வதும் சிகிச்சை மேற்கொள்வதும் உங்கள் உயிரைக் காக்கும். உங்களுக்கு சோதனை செய்து கொள்ள விருப்பமில்லை என்றால் தயவு செய்து அலுவலர்களிடம் தகவல் தெரிவியுங்கள்.

## நேர்மறையான முடிவு வரும் பட்சத்தில் யாரெல்லாம் அந்த நேர்மறையான சோதனை முடிவுகளை காண முடியும்.?

அனைத்து NHS சோதனை முடிவுகளைப் போலவே உங்கள் சோதனை முடிவுகளும் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும். உங்களுக்கு பராமரிப்பு வழங்கும் NHS சுகாதார பராமரிப்பு அலுவலர்கள் மட்டுமே உங்கள் சோதனை முடிவுகளை அணுக முடியும் என்பதே இதன் பொருள் .

## இந்த வைரஸ்கள் குறித்து மேலும் அதிக தகவல்களை நான் எங்கிருந்து பெறமுடியும் ?

### ஹெப்பாட்டிட்டிஸ் B

NHS (ஹெப்பாட்டிட்டிஸ் B பக்கம்): www.nhs.uk/conditions/hepatitis-b

பிரிட்டிஷ் லிவர் ட்ரஸ்ட்: www.britishlivertrust.org.uk

### ஹெப்பாட்டிட்டிஸ் C

NHS (ஹெப்பாட்டிட்டிஸ் C பக்கம்): www.nhs.uk/conditions/hepatitis-c

ஹெப்பாட்டிட்டிஸ் C ட்ரஸ்ட்: www.hepctrust.org.uk

**Human Immunodeficiency Virus (HIV)**

NHS (HIV மற்றும் AIDS பக்கம்): www.nhs.uk/conditions/hiv-and-aids

டூ. இட் லண்டன்: www.doitlondon.org

நேஷனல் AIDS ட்ரஸ்ட்: www.nat.org.uk

டெர்ரன்ஸ் ஹிக்கின்ஸ் ட்ரஸ்ட்: www.tht.org.uk

பதிப்பு 1.0 | இறுதியாக புதுப்பிக்கப்பட்ட நாள்
அக்டோபர் 2024